செய்தி வெளியீட்டு எண்–392 நாள்– 18.07.2009

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை – 2
## படகு இல்லம், முட்டுக்காடு
## புதிய மூங்கில் படகு குழாம் திறப்பு விழா

சென்னை அருகே 36 கி.மீ. தூரத்தில் முட்டுக்காடு படகு இல்லம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் 8.1.1984 முதல் இயக்கப்பட்டு வருகிறது. அழகு மிளிரும் கிழக்கு கடற்கரை சாலையில், பக்கிங்காம் கால்வாய், வங்கக் கடலுடன் இணையும் அழகிய கோவளம் கடற்கரை அருகே அமைந்துள்ள இந்த படகு இல்லம் ஆரம்பத்தில் ஒரு சில துடுப்பு படகுகள் மற்றும் விசைப்படகுகள் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. சுற்றுலா பயணிகளின் படகு சவாரிக்கான வருகை அதிகரித்ததால், படிப்படியாக படகுகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. தற்போது 27 விசைப்படகுகளும், 15 துடுப்பு படகுகளும், 9 மிதிப்படகுகளும் ஆக மொத்தம் 51 படகுகள் உள்ளன. மேலும் 8 இருக்கைகள் உள்ள 4 விசைப்படகுகளும், 3 இருக்கைகள் உள்ள 1 சொகுசுப் படகும் வாங்கப்பட உள்ளன. இக்குழாமின் வருமானம் வருடத்திற்கு வருடம் அதிகரித்து வருகிறது. 2006–2007 ம் ஆண்டுக்கான நிகர வருவாய் 104.98 இலட்சம், நிகர இலாபம் 49.75 இலட்சம். 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிகர வருவாய் 139.91 இலட்சம், நிகர இலாபம் 58.46 இலட்சம். 2008–2009 ஆண்டுக்கான நிகர வருவாய் 161.92 இலட்சம், நிகர இலாபம் 79.77 இலட்சம்.

முட்டுக்காடு படகு சவாரிக்காக வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிகளை மேம்படுத்தும் வகையில் ரூ.87 லட்சம் செலவில் மூங்கில் தூண்கள் மற்றும் மூங்கில் கூரையால் ஆன முற்றிலும் புதுமை வடிவத்துடன் படகுக் குழாம் அமைக்கப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் ஓய்வு இடத்தில்(Lounge) அமர்ந்த வண்ணம் உணவு அருந்திக்கொண்டே படகு சவாரி காட்சியை கண்டுகளிக்கலாம். அலுவலகம், பயணிகள் ஓய்வகம், உணவகம் உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த புதிய மூங்கில் படகு குழாமிற்கு வருகை தரும் படகு சவாரியாளர்கள் மற்றும் கிழக்குக் கடற்கரை சாலையில் பயணிக்கும் அனைவரின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் மரத்தாலான பழைய படகுத்துறை அகற்றப்பட்டு ரூ.12 இலட்சம் செலவில் நவீன புதிய மிதக்கும் படகுத்துறை (Floating Boat Jetty) அழகுடன் அமைக்கப்பட்டுள்ளன. அதைத்தவிர, வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.5லட்சம் செலவில் நவீன சுகாதாரமான கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பயணிகள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை கருத்திற்குகொண்டு ரூ.3.75 லட்சம் செலவில் எரிபொருள் (Fuel Room) சேமிப்புப் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது.

மகிழுந்து (Car) மற்றும் இருசக்கர வாகனங்களை நிறுத்த தாராளமான இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில், இங்கு குழந்தைகள் பொழுதுபோக்கு மையம் அமைக்கப்படவுள்ளது.

**இந்த புதிய மேம்படுத்தப்பட்ட படகுக்குழாம் இன்று (18.07.2009) தலைமைச்செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி இஆப .,அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் சுற்றுலாத்துறை செயலாளர் முனைவர் வெ. இறையன்பு இஆப., தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் ஆ.சி. மோகன்தாஸ் இஆப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.**

அனைத்து தரப்பு மக்களும் குறைந்த செலவில் படகுப் பயணம் செய்து, நிறைவான புத்துணர்ச்சிபெற முட்டுக்காடு படகு இல்லத்திற்கு வருகை தாருங்கள் என்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தங்களை அன்புடன் அழைக்கிறது.

*************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**